# புதுவைப் பல்கலைக்கழகம்
## தோட்டக்கலைத் துறை

ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 14.

## ஏல அறிவிப்பு

புதுவைப் பல்கலைக்கழக வளாகம் மற்றும் காரைக்கால் P.G. சென்டர் வளாகத்திலும் புதிய கட்டிடங்கள் அமையவுள்ள பகுதிகளில் வெட்டப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள மரங்கள் இருக்கின்றவை இருக்கின்ற நிலைகளில் (as is where as) ஏலத்தில் எடுப்பதற்காக www.auctionindia.com என்கின்ற இணையதளம் மூலம் 16.11.2011 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து மதியம் 01.00 மணிவரை பொது ஏலம் விடப்பட உள்ளது.

**புதுவைப் பல்கலைக்கழக வளாகம்:**

1. பென்சில் மரம்
2. விறகு மரம்

**காரைக்கால் P.G. Centre வளாகம்:**

3. விறகு மரம்

விண்ணப்பப் படிவங்களை வரும் 03.11.2011 முதல், படிவம் ஒன்றுக்கு "**நிதி அதிகாரி, புதுவைப் பல்கலைக்கழகம்**" என்ற பெயரிடப்பட்ட ரூ.100/= க்கான வரைவோலையை (D.D.) நேரடியாக செலுத்தி தோட்டக்கலைத்துறை மற்றும் காரைக்கால் P.G. சென்டர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். புதுவைப் பல்கலைக்கழக இணையதளத்தின் மூலமாக பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் விண்ணப்பத் தொகையின் வரைவோலையை (D.D.) இணைத்தும் அனுப்பலாம்.

ஏலத்திற்கான விதிமுறைகள் மற்றும் இதர விபரங்கள், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ஏல விபரங்களை பல்கலைக்கழக இணையதளத்தின் (www.pondiuni.edu.in) மூலமாகவும் அறிந்துகொள்ளலாம்.

**இடம் :** ஆர்.வி. நகர்
**தேதி :** 01.11.2011

**பதிவாளர்**
**புதுவைப் பல்கலைக்கழகம்**

# புதுவைப் பல்கலைக்கழகம்
## தோட்டக்கலைத் துறை
### ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி - 14.

**விண்ணப்ப எண்:**__________ **தேதி:** ____________

புதுவைப் பல்கலைக்கழக வளாகம் மற்றும் காரைக்காலிலுள்ள புதுவைப் பல்கலைக்கழக P.G. சென்டர் வளாகத்திலும் புதிய கட்டிடங்கள் அமைய உள்ள பகுதிகளில் வெட்டப்பட்ட மரங்களை ஏலம் எடுப்பதற்கான விண்ணப்பப் படிவம்.

1. விண்ணப்பதாரர் பெயர் :
2. தந்தையின் பெயர் :
3. முழு முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண் :
4. பல்கலைக்கழகத்திற்கு செலுத்தவேண்டிய உரிமத்

   தொகை பாக்கி இருந்தால் அதன் விபரம் குறிப்பிடவும்:
5. ஏலதாரரின் காப்பீட்டுத்தொகை : i. பென்சில் மரம் - ரூ.10,000/=
   ii. விறகு மரம் - ரூ.20,000/=
   iii. விறகு மரம் - ரூ.1,000/= (for a whole lot - காரைக்காலில் உள்ளவை)
6. ஏலத்தின் ஆரம்ப தொகை : கீழ்க்கண்ட அட்டவணைப்படி
7. ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் ரூ.100/= -க்குமேல் இருக்கவேண்டும் என்பதை அறியவும்.

**ஏலம் விடப்பட உள்ள வெட்டப்பட்ட மரங்களின் விபரம் (Timber wood / Fire wood):**

| குவியல் எண் (Lot no.) | மரவகைகள் | ஏல ஆரம்பத் தொகை டன் ஒன்றிற்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | பென்சில் மரம் (அக்கேசியா) | 5150/= டன் ஒன்றிற்கு |
| 2. | விறகுமரம் | 1256/= டன் ஒன்றிற்கு |

| குவியல் எண் (Lot no.) | மரவகைகள் | ஏல ஆரம்ப தொகை (for whole lot) (ரூ.) |
|---|---|---|
| 3. | விறகுமரம் (காரைக்காலில் உள்ளவை) | 6044/= மொத்த மரங்கள் |

**உறுதிப்பிரமாணம்**

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் (1 முதல் 26 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து நிபந்தனைகளுக்கும் (1 முதல் 26 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் விண்ணப்பித்துள்ளேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**இடம் :** ஆர்.வி. நகர். (கையொப்பம்)

**தேதி :** 01.11.2011. **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

# ஏல நிபந்தனைகள்

1. ஏலம் நடத்தப்படும் இணையதளத்தின் முகவரி: www.auctionindia.com, ஏல நேரம்: 16.11.2011 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து மதியம் 01.00 மணிவரை.

2. பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்கக் கூடாது.

3. புதுவைப் பல்கலைக்கழக வளாகத்திலும், காரைக்காலிலுள்ள புதுவைப் பல்கலைக்கழக P.G. சென்டரிலும் புதிய கட்டிடங்கள் அமைய உள்ள இடங்களில் வெட்டப்பட்ட மரங்களை இருக்கின்றவை இருக்கின்ற நிலையில் எடுத்துச்செல்ல ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் தாங்கள் விண்ணப்பித்துள்ள மரக் குவியல்களை (Wood lots) முழுமையாக பார்வையிட்டு சரிபார்த்த பின்னரே விண்ணப்பிக்க வேண்டும். மரங்களை பார்வையிடுவதற்கு தோட்டக்கலை அலுவலகத்தில் உள்ள ஊழியர்களுடன் அலுவலக நாட்களில் சென்று பார்வையிடலாம்.

4. விண்ணப்பப்படிவத்துடன் தற்காலிக காப்பீட்டு தொகைக்கான வரைவோலையை (D.D.) **நிதி அதிகாரி, புதுவைப் பல்கலைக்கழகம்** எனும் பெயரில் செலுத்தி, ஏலத்தில் பங்கேற்பதற்கான பதிவு பெயரையும் (User name) மற்றும் **இரகசிய எழுத்தையும் (Password) தோட்டக்கலைத்துறை** அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

5. காரைக்கால் P.G. சென்டர் வளாகத்தில் உள்ள விறகு மரங்களுக்குண்டான விண்ணப்ப படிவம் மற்றும் அவற்றிக்குண்டான ஏலத்தில் பங்கேற்பதிற்கான பதிவு பெயரையும் (User name) மற்றும் **இரகசிய எழுத்தையும் (Password) காரைக்கால் P.G.சென்டர்** அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. விண்ணப்பத்துடன் மேற்குறிப்பிட்ட தொகைக்கான வரைவோலையை 15.11.2011 **மாலை** 05.30 மணிக்குள் செலுத்தினால் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

7. ஏலத்தில் பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் இணையதளம் www.auctionindia.com மூலமாக மட்டுமே **( online auction )** பங்குபெறமுடியும்.

8. விண்ணப்பதாரர் ஏதோ ஒரு காரணத்தினால் பதிவு பெயரையோ (User name) அல்லது இரகசிய எழுத்தையோ (Password) அல்லது இரண்டையும் தவறவிட்டால், முன்வைப்பு தொகைகளை மீண்டும் செலுத்தி வேறொரு பதிவு பெயரையும் (User name) மற்றும் இரகசிய எழுத்தையும் (Password) **15.11.2011** அன்று மாலை **05.30** மணிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளவேண்டும்.

9. தோட்டக்கலைத்துறை மூலம் பெறப்பட்ட பதிவு பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்தை (Password) **தவறவிட்டவர்கள்** அவர்களால் பெறப்பட்ட பதிவு பெயர் மற்றும் இரகசிய எழுத்தை வேறொருவர் **துஷ்பிரயோகம்** செய்யாமல் இருக்க **உடனடியாக** தோட்டக்கலைத்துறைக்கு தகவல் தெரிவிக்கவேண்டும்.

10. இணையதளம் மூலம் ஏலத்தில் பங்குபெறுவது குறித்த **மாதிரி ஏலத்தினை (Mock auction)** மேற்குறிப்பிட்ட இணையதளத்தின் மூலம் 15.11.2011 அன்று மதியம் 02.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை உபயோகப்படுத்தி அறிந்து கொள்ளலாம்.

11. ஏலத்தில் பங்கு பெற விரும்பும் டெண்டர்தாரார்கள், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குவியலுக்கும் தனித்தனியே **ஆரம்ப** ***ஏலத்தொகைக்குமேல்*** தாங்கள் விரும்பும் ஏலத்தொகையினை குறிப்பிடவேண்டும். ஆரம்ப ஏலத்தொகையை விட குறைவாக குறிப்பிடப்பட்ட ஏல விண்ணப்பங்கள் கண்டிப்பாக ***நிராகரிக்கப்படும்***.

12. ஏலத்தில் பங்குபெற விரும்பும் டெண்டர்தாரர்கள் ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **ரூ.100/= க்குமேல்** தான் குறிப்பிட முடியும் என்பதை அறிந்துகொள்ளவும்.

13. சென்ற ஆண்டில் டெண்டர் உரிமம் பெற்று அந்த உரிமத் தொகையை இதுவரை செலுத்தாதவர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. கடந்த கால உரிமத் தொகைகளை 10% வட்டியோடு செலுத்திய பிறகே அவர்கள் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

14. ஏலதாரர்களின் (முதல் மூன்று) காப்பீட்டு தொகை பிடித்தம் செய்து வெற்றி பெற்ற முதல் ஏலதாரர் ஏலத்தொகையை செலுத்திய பின்னரே, மற்ற இரண்டு ஏலதாரர்களுக்கு காப்பீட்டு தொகை அளிக்கப்படும்.

15. வெற்றி பெற்ற டெண்டர்தாரரின் காப்பீட்டுத் தொகை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் மரங்களை எடுத்துச்சென்ற பின்னரே திருப்பி அளிக்கப்படும்.

16. விண்ணப்பித்த டெண்டர் படிவங்களின் முடிவுகள் பல்கலைக்கழக நிர்வாக கட்டிடத்தில் ஏல பொறுப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அறிவிக்கப்படும்.

...2..

17. டெண்டர்தாரர்கள் பல்கலைக்கழகம் நிர்ணயித்த தொகையை ஏலத்தில் எட்டவில்லையென்றால் பல்கலைக்கழகம் எவ்வித முன்னறிவிப்போ, நிபந்தனையோ இன்றி அன்றோ, வேறு நாளோ மறு ஏலம் நடத்தவோ அல்லது டெண்டர் குழுவின் தீர்மானப்படி முடிவு செய்வதற்கும் பல்கலைக் கழகத்திற்கு முழு உரிமையுண்டு.

18. எந்த காரணமும் கூறாமல் டெண்டரை எற்கவோ, நிராகரிக்கவோ அல்லது இது சம்பந்தமாக வேறு ஆணை பிறப்பிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

19. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்கள் ஏலத்திற்குண்டான முழு தொகையினை **பல்கலைக்கழகம் குறிப்பிட்ட கால வரையறைக்குள்** செலுத்திவிட வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால் எவ்வித முன்னறிவிப்பும், காரணமும் இன்றி அவரின் காப்புத் தொகையை பிடித்தம் செய்து மேலும் அந்த டெண்டர் உரிமத்தை அவருக்கு அடுத்தபடியாக பல்கலைக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப ஏலத்தொகையை விட அதிகமாக குறிப்பிட்டிருக்கும் டெண்டர்தாரருக்கு அளிக்கப்படும்.

20. பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மரங்களின் ஏலத்தில் வெற்றிபெற்ற ஏலதாரர் விறகுகளை ஏற்ற வரும்முன் தாங்கள் எடுத்து வரும் காலி வண்டியின் எடையை (empty load) புதுச்சேரியிலுள்ள மின் இயந்திர வாகன எடை மேடையில் (Electronic weighing machine) சரிபார்த்து ரசீதைக் கொண்டுவரவேண்டும். விறகுகளை வண்டியில் ஏற்றிய பிறகு, புதுவைப் பல்கலைக்கழக தோட்டக்கலைத்துறையின் ஊழியர் ஒருவரையும் மற்றும் புதுவைப் பல்கலைக்கழக காவலர் பிரிவிலிருந்து ஒருவரையும் விறகு ஏற்றிய வண்டியுடன் அழைத்துச்சென்று, அதே மின் இயந்திர எடைமேடையில் எடைபோட்டு, அதற்குண்டான ரசீதை தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

21. ஒப்பந்ததாரர் பல்கலைக்கழகத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும், பொதுக் கட்டுப்பாடு மற்றும் தனிக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் கட்டுப்பட்டவர் ஆவார்.

22. வெற்றி பெற்ற டெண்டர்தாரர் ஏலத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் புதுவைப் பல்கலைக்கழக கணக்கில் (A/c. no.201) வங்கியில் பணம் செலுத்துவதற்கு முன்பாக **தோட்டக்கலைத் துறை அலுவலரிடம் / காரைக்கால் P.G. சென்டர் அலுவலரிடம்** வங்கி சலானில் ஒப்புதல் கையொப்பம் பெற்ற பின்னரே வங்கியில் பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு ஒப்புதல் கையொப்பம் பெறாமல் தொகை செலுத்தப்பட்டால் அத்தொகை ஏலத்தின் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படாது.

23. ஏலத்தில் வெற்றி பெற்ற டெண்டர்தாரர் மற்றும் அவரின் பிரதிநிதிகள் ஏலம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து, பென்சில் மரங்களை **07 நாட்களுக்குள்ளும்,** விறகு மரங்களை **30 நாட்களுக்குள்ளும்** புதுவைப் பல்கலைக்கழக தோட்டக்கலைத்துறை அலுவலர் / P.G. சென்டர் காரைக்கால் வளாக அலுவலர் முன் அனுமதிபெற்று பல்கலைக்கழக வளாகத்திலிருந்து **வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை** மட்டுமே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

24. பல்கலைக்கழக பாதுகாவலர்களோ, தோட்டக்கலை ஊழியர்களோ அல்லது நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்களோ கேட்கும்போது டெண்டர்தாரர் உரிமம் பெற்றதிற்கான பணம் செலுத்திய ஆதார நகலை / அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்.

25. வெற்றி பெற்ற விண்ணப்பதாரர் மற்றும் உதவி பணிகளுக்குண்டான நபர்களின் விபரங்களை தோட்டக்கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதிக்கப்பட்ட நேரங்களில் அலுவலக / காவல் பணிபுரியும் ஊழியர்கள் கேட்கும் பொழுது காண்பிக்கும் விதமாக எப்பொழுதும் **அனுமதி சீட்டை** தங்கள் வசம் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்.

26. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்கள், ஏலத்தில் கிடைக்கப்பெற்ற மரங்களுக்குண்டான முழு தொகையையும் செலுத்திய பிறகு, மரங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்குண்டான அனுமதி சீட்டை, பல்கலைக்கழக பாதுகாவலர் அலுவலகம் மூலமாக பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும்.

## உறுதிப்பிரமாணம்

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், மேற்க்குறிப்பிட்டுள்ள அனைத்து ஏல நிபந்தனைகளையும் (1 முதல் 26 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து ஏல நிபந்தனைகளுக்கும் (1 முதல் 26 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் பங்குபெறுகிறேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

பெயர் :

முகவரி :

**தொலைபேசி / கைபேசி எண் :** **(கையொப்பம்)**

**தேதி :** **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**